


திருவாய்ப்பாடி-திருப்பனந்தாள் வட்டம், தஞ்சை மாவட்டம்-612 504

# அறுபத்துமூவர் திருக்கோயில் திருப்பணி துவக்கவிழா அழைப்பிதழ்

நாள் : 19-01-2011 புதன்கிழமை காலை 9.00 மணிக்குமேல்

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்!







உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம் - சேக்கிழார்

தவமுடைய திருவுடையீர்,

உலகெலாம் இயங்கும் பொருட்டு சிவபெருமான் பொன்னம்பலத்தில் நின்று கூத்தாடும் தில்லையில் தொடங்கி தமிழ்நாடு முழுவதும் பாடல்பெற்ற சிவாலயங்கள், அறுபத்துமூவர் அவதாரத் தலங்கள், சைவ ஆதீனங்கள், புகழ்பெற்ற பேரூர்கள் ஆகியவற்றின் வழியே வலம் வந்த அறுபத்துமூவர் ரதயாத்திரை சேக்கிழார் அவதரித்த குன்றத்தூரில் நிறைவுபெற்றது. தமிழ்நாடு முழுவதும் புனித யாத்திரை செய்து அருள் பாலித்த அறுபத்துமூவருக்கும், கும்பகோணத்திலிருந்து 15 கி.மீ. தொலைவில், சென்னை செல்லும் நெடுஞ்சாலையில் சண்டேஸ்வரர் முத்திபெற்ற சிறப்புக்குரிய ஊராகிய திருவாய்ப்பாடியில் சைவ ஆதீன குருமகா சந்நிதானங்களின் வழிகாட்டுதலுடன் **அறுபத்துமூவர் திருக்கோயில் அமைய உள்ளது.**

திருக்கோயில் திருப்பணி துவக்கவிழா விக்ருதி வருடம் தை மாதம் **5ம்** தேதி **(19-01-2011)** புதன்கிழமை பௌர்ணமி திதி, புனர்பூசம் நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபதினத்தில் காலை **9.00** மணிக்குமேல் நடைபெற திருவருள் கூட்டியுள்ளது.

விழாவில் திருவாவடுதுறை ஆதீனம் 23வது குருமகா சந்நிதானம் **சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்.**
தருமைஆதீனம் 26வது குருமகா சந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.**
மதுரை ஆதீனம் **ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்,**
திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் அதிபர் கயிலை மாமுனிவர் **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்,**
கோவை-ஆனைகட்டி-ஆர்ஷ்வித்யா குருகுல நிறுவனர் **பூஜ்யஸ்ரீ தயானந்த சரஸ்வதி சுவாமிகள்.**
திருமுதுகுன்றம் அருள்மிகு குமாரதேவர் திருமடம், சீர்வளர்சீர் **கல்யாண சுந்தர சிவப்பிரகாச பரமாச்சாரிய சுவாமிகள்**

ஆகிய குருமகா சந்நிதானங்களும், திருமடங்களின் தலைவர்களும், எழுந்தருளி அருளாசி வழங்க உள்ளார்கள். நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சான்றோர்கள், தொழில் அதிபர்கள், சிவபூசை செல்வர்கள், ஆகியோரும் பங்குபெற்று சிறப்பிக்க உள்ளார்கள். சிவநேயச்செல்வர்கள் விழாவில் கலந்து கொண்டு திருவருளும் குருவருளும் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

**அறுபத்துமூவர் அறக்கட்டளை**
3/4, சைவ சந்து, விருத்தாசலம்.
Cell : 9841015960
9444168508
9842488031
9443176369

GR பிரிண்டர்ஸ்...9843845292